DINA KARAN

13 DEC 2022

PAGE 15



ஜி20 தலைமை பொறுப்பேற்ற

# பிரதமர் மோடிக்கு புதுவை பல்கலை துணைவேந்தர் வாழ்த்து





புதுச்சேரி, டிச. 13: பிரதமர் மோடிக்கு, புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் அனுப்பியுள்ள வாழ்த்து செய்தி:

இந்தியா அமைதி, சகவாழ்வு மற்றும் வளர்ச்சிக்காகப் பாடுபடும் நாடு. சமீப காலங்களில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை உலகளவில் மிகவும் பாராட்டப்பட்டு வருகிறது. இந்தியாவின் கருத்துக்கள் மற்றும் கொள்கைகளுக்கு அனைத்து நாடுகளும் உரிய மரியாதை கொடுக்கத் தொடங்கியுள்ளன. மேலும், இந்தியா போரையோ, பிறர் நிலத்தை ஆக்கிரமிப்பதையோ என்றும் விரும்பவில்லை. அமைதிக்காகவும், மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்காகவும் நாங்கள் பாடுபடுகிறோம் என்ற செய்தியை இந்தியா எப்போதும் தெளிவாக எடுத்துரைத்துக் கொண்டேயிருக்கிறது. அண்டை நாடுகளுக்கிடையே அமைதியையும் மகிழ்ச்சியையும் பரப்புவதையே இந்தியா விரும்புகிறது. மேலும் கொடிய தொற்றுநோய் காலங்களில் கோவிட் தடுப்பூசிக்கு இந்தியா எவ்வாறு உதவியது என்பது அனைவருக்கும் தெரியும்.

இந்தியா சமீபத்தில் ஜி20-ன் தலைமை பதவியை ஏற்றுக்கொண்டது. இதிலுள்ள நாடுகளை இந்தியா முக்கிய கவசமாக இருந்து வழிநடத்தும். நம் தலைமை முழு உலகத்தின் தலைமை என்று உணர்த்துகிறது.

ஜி20-ன் இந்த முக்கியமான நிலையில் இருந்து மனிதகுலத்தின் ஒற்றுமைக்காகப் பணியாற்றும் பிரதமர் நரேந்திர மோடிக்கு முழு மனதுடன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.